DINKARAN 28 JUL 2008



ஈஷா யோகா மையம் சார்பில் ஆனந்த சங்கமம் நிகழ்ச்சி ஈரோடு செங்குந்தர் பள்ளி மைதானத்தில் நேற்று நடந்தது. இதில் திரண்ட கூட்டம். உள்படம்: இதில் ஈஷா யோகா மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் அருளுரை வழங்கினார்.

TAMIL MURASU 28 JUL 2008

# விழிப்புணர்வுடன் இருந்தால் ஆனந்தம் தேடி வரும்

## ஜகி வாசுதேவ் பேச்சு





ஈஷா யோகா மையம் சார்பில் ஆனந்த சங்கமம் நிகழ்ச்சி ஈரோடு செங்குந்தர் பள்ளி மைதானத்தில் நேற்று நடந்தது. இதில் திரண்ட பெண்கள் கூட்டத்தின் ஒரு பகுதி. அடுத்தபடம்: ஈஷா யோக மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் அருளுரை வழங்கினார்.

ஈரோடு, ஜூலை 28-

ஈஷா யோகா மையம் சார்பில் ஈரோடு செங்குந்தர் பள்ளி மைதானத்தில் 'ஆனந்த அலை' என்ற யோகா பயிற்சி நிறைவு விழா 'ஆனந்த சங்கமம்' என்ற பெயரில் நேற்று மாலை நடந்தது.

ஈரோடு மாநகரத்தை மையமாக கொண்டு ஈரோடு, கிருஷ்ணகிரி, ஒசூர், சேலம், திருப்பூர், திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய பகுதிகளில் கடந்த ஜூன் 11 முதல் ஜூலை 16 வரையிலும் ஈஷா யோகா மையம் சார்பில் 'ஆனந்த அலை யோகா பயிற்சி வழங்கப்பட்டது. ஆனந்த அலை யோகா பயிற்சி மூலம் 10,657 பயன் பெற்றனர்.

இதில் பங்கேற்ற ஈஷா யோகா மைய நிறுவனர் ஜகி வாசுதேவ் கலந்து கொண்டு பேசியதாவது: ஆனந்தத்தை பெற ஒவ்வொரு உயிரும் ஏங்குகிறது. உடலுக்கும், உயிருக்கும் இடையே மனம் இருக்கிறது. உடல் ஒரு கருவி.

இதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும். உடலும், மனமும் விழிப்புணர்வாக இருந்தால் ஆனந்தம் நம்மை தேடி வரும். உடலும், மனமும் செயல்பட ஒரு சக்தி தேவை. அந்த சக்தியே உடலுக்கும், மனதுக்கும் வழங்குவது நம்முடைய ஆன்மா.எனவே மனம், உடல் இவற்றை சமநிலையில் வைத்திருந்தால் உடல் நிலை, மனம், உயிரிலும் நோய் என்பது உருவாகாது. பிராணமய கோஷம், அன்னமய கோஷம், மனோமய கோஷம், விஞ்ஞானமய கோஷம் இவற்றை சம நிலையில் வைத்திருந்தால் மனிதன் எல்லா வித நோய்களையும் எதிர்த்து வாழ்வில் வெற்றி பெறுவான். மன நோய் உடல் நோயே கிடையாது.மனதையும், உடலையும் ஒரே நேர் கோட்டில் வைத்திருந்தால் எந்த ஒரு நிலையிலும் மனிதனுக்கு வெற்றி கிடைக்கும் என்பது உறுதி.

மனம், உடல் ஆகியவற்றின் அடையாளத்தை கழற்றி வைத்து விட்டு சிறிது இடைவெளி விட்டு மீண்டும் எடுத்து அணிந்து கொள்வதே தியானம். உலகில் நமது திறமையை சார்ந்தே எந்த ஒரு விஷயமும் நடக்கிறது. உள்ளத்தில் போராட்டம் இல்லாமல் இருந்தால் நம் திறமை சிறப்பாக வெளிப்படும். உள்ளத்தில் எவ்வித போராட்டமும் இல்லாமல் இருப்பது அவசியம். போராட்டம் வராமல் இருக்க தியானம் என்பது ஒவ்வொருவருக்கும் தேவையான ஒன்று. இவ்வாறு அவர் பேசினார்.

விழாவின் துவக்கத்தில் ஈஷாவின் இசை முழக்கம் என்ற இசை நிகழ்ச்சி நடந்தது. பழங்கால முரசு ஒலியுடன் நவீன புல்லாங்குழல் இசையை இணைத்து வாசித்தது பார்வையாளர்களை கவர்ந்தது. ஆனந்த அலையின் அடுத்த நிகழ்ச்சி கோவை, மதுரை மாவட்ட சுற்றுப்புற பகுதிகளில் விரைவில் நடக்க உள்ளதாக ஈஷா யோகா நிர்வாகிகள் தெரிவித்தனர்.





ஈரோட்டில் நடைபெற்ற ஆனந்த அலை நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜக்கி வாசுதேவ்


ஆனந்த அலை நிகழ்ச்சியில் பங்கேற்ற பல்லாயிரக்கணக்கான தியான அன்பர்கள்.

# ஜக்கியின் வருகையால் ஈரோட்டில் மலர்ந்த ஆனந்த அலை





ஈரோடு, ஜூலை.28-

நம்நாட்டில் இன்னும் 15 ஆண்டுகளில் விவசாயத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை 20 சதவீதமாக குறைய வேண்டும் என ஈரோட்டில் நடைபெற்ற ஆனந்தசங்கமம் என்ற நிகழ்ச்சியில் ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் தெரிவித்தார்.

ஈஷா யோகா மையம் கோவை வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் இயங்கி வருகிறது. இது பொது மக்கள் இடையே யோகா கலையை முன்னெடுத்து செல்கிறது. கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களில் ஆனந்த அலை என்ற யோகா பயிற்சி நடைபெற்றது. சென்னையில் 120 இடங்களில் 12 ஆயிரம் பேரும், திருச்சியில் 100இடங்களில் 10ஆயிரம் பேரும் யோகா பயிற்சி பெற்றனர். தற்போது கோவையை மையமாகக் கொண்டு 120 இடங்களிலும் மதுரையை மையமாகக் கொண்டும் ஆனந்த அலை நடைபெற உள்ளது. அதேபோல் ஈரோடு மாநகரத்தை மையமாகக் கொண்டு ஈரோடு, கிருஷ்ணகிரி, ஒசூர், சேலம், திருப்பூர், திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய பகுதிகளில் கடந்த ஜூன் 11ம் தேதி தொடங்கி ஜூலை 16ம் தேதி வரை 10 ஆயிரத்து 657 பேர் கலந்து கொண்ட ஆனந்த அலை யோகா பயிற்சி ஈஷா யோக மையத்தால் நடத்தப்பட்டது. ஆனந்த அலையில் தொழிலதிபர்கள், டாக்டர்கள், இன்ஜினியர்கள், சமூக சேவகர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட சுமார் 10 ஆயிரம் பேர் பங்கு பெற்றனர். ஆனந்த அலையின் நிறைவு விழாவில் ஈஷா யோகா மைய நிறுவனர் சக்தி வாசுதேவை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சந்தித்த ஆனந்த சங்கமம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் மத்தியில் ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கி வாசுதேவ் சொற்பொழிவு ஆற்றினார். அப்போது அவர் கூறியதாவது: மனிதனாகிய ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான நோக்கங்கள் இருக்கலாம். ஒருசிலருக்கு பணத்தின் மீதும், மேலும் ஒரு சிலருக்கு அதிகாரத்தின் மீது ஆசை இருக்கலாம். ஆனால் ஆழமாக பார்த்தால் இதன் மூலம் வரக்கூடிய ஆனந்தமானது ஒரு முறை மட்டுமே இருக்கும். இந்த ஆனந்தம் நீடிப்பது இல்லை. நிரந்தர ஆனந்த சத்தம் எல்லாருக்கும் கேட்டால் தான் நம்பிக்கை பிறக்கும். இந்த ஆனந்தம் அலை, அலையாக உருவாக சாதகம் அவசியமாகும். ஆனந்த சாதகம் குறித்து விழிப்புணர்வை அனைவருக்கும் ஏற்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள 6 கோடி மக்களில் கடந்த 25 ஆண்டுகளில் மிகவும் குறைவான நபர்களே ஆனந்த அலையை அடைந்துள்ளனர். இது முழுமையான பலனை அளிக்காது. ஏற்கனவே பயிற்சி பெற்றவர்கள் கூட அன்னமய கோஷா, பிராணமய கோஷா, மனமய கோஷா ஆகியவற்றை சரியான நிலையில் மேற்கொண்டு ஒரே நேர்கோட்டில் கொண்டு வந்தால், நல்ல பலனை எடுக்க முடியும். மேலும் பேரானந்தத்தை அடைய முடியும் என்றார்.

பின்னர் சொற்பொழிவில் கலந்து கொண்டவர்கள் கேட்ட கேள்விக்கு ஜக்கி வாசுதேவ் பதில் அளித்தார். அதன் விவரம்:

கேள்வி: உங்களை பார்த்தாலோ அல்லது நினைத்தாலோ எனக்கு கண்ணீர் வருகிறது . இது பாதிப்பா?

பதில்: பாதிக்கப்பட்டவர்கள் கண்ணீர் வடித்தால் கஷ்டப்படுகிறான் என்பதை உணர்கிறோம். இந்த பாதிப்பை நாமாக உருவாக்குகிறோம். யோகா செய்து கண்ணீர் வந்தால் ரொம்ப நல்லது. என்னை பார்த்தால் உங்களுக்கு கண்ணீர் வருவது போல், எதை பார்த்தாலும், எந்த உயிரை பார்த்தாலும் நமக்கு கண்ணீர் வர வேண்டும். இந்நிலை வரும் போது எல்லை இல்லா ஆனந்தம் ஒவ்வொருவருக்கும் ஏற்படும்.

கேள்வி : நம் நாட்டில் முதுகெலும்பான விவசாயத்தில் இன்றைய இளைஞர்கள் அடியெடுத்து வைக்க பயப்படுகிறார்களே? எதிர்காலத்தில் விவசாயம் அழிந்து விடுமா?

பதில்: நாம் இன்று கம்ப்யூட்டர் ஐ.டி.துறையில் இருந்து வருகிறோம். ஆதலால் இளைஞர்கள் விவசாயத்திற்கு வர யோசிக்கின்றனர். இருப்பினும் இளைஞர்கள் அனைவரும் விவசாயம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நம் நாட்டில் 100கோடி மக்கள் உள்ளனர். இதில் 70 சதவீதம் பேர் விவசாயம் செய்து சாப்பாடு போடுகின்றனர். இந்த நிலை நாட்டிற்கு நல்லது அல்ல. காரணம் அமெரிக்காவில் 2 சதவீத மக்களே விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றனர். காரணம் அங்கு நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விவசாய பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் அந்நாட்டு விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்கின்றனர். நம் நாட்டில் இன்னும் புதிய தொழில்நுட்பங்கள் விவசாயிகளை முழுமையாக சென்றடையவில்லை. இன்னும் 15 வருடத்தில் நம் நாட்டில் 20சதவீதம் பேர் மட்டுமே விவசாயத்தில் இருக்க வேண்டும். அதற்கு தேவையான விஞ்ஞான பூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். எஞ்சியுள்ள மக்களுக்கு வேறு ஆற்றலை உருவாக்க வேண்டும். நம் நாட்டில் பிரச்னை என்று வரும் போது மட்டுமே தீர்வு காணக்கூடிய மனோபாவம் கொண்டுள்ளோம். நம்மிடம் முன்னோக்கு சிந்தனை இல்லை. விவசாயிகளின் நிலை மாற தற்போது முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தொழிலதிபர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க மார்க்கெட்டிங் வசதி ஏற்படுத்த ஒரே ஒரு தொழில் அதிபர் அதிக முதலீடு செய்ய முன்வந்தார். இந்த ஒரு முயற்சி மட்டும் போதாது. இந்த முயற்சிக்கும் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர் . இந்த பிரச்னையை தீர்க்க கூட்டு முயற்சி அவசியமாகும். விவசாயத்திற்கு தேவையான நிதி, குடோன், மார்க்கெட்டிங், போக்குவரத்து உட்பட பல்வேறு கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள முறைப்படி முயற்சி செய்வது அவசியமாகும்.

கேள்வி: போலி சாமியார்கள் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், உயர்ந்த நிலையில் உள்ள உங்களை(ஜக்கி வாசுதேவை) மக்கள் நம்ப விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமா?

பதில்: ஒரு வீட்டிற்குள் சின்ன ஏமாற்றம் ஏற்படுவது போல், இதுவும் சகஜம். இதை மாற்ற முயற்சி அவசியம். சமூகத்தில் எல்லா தரப்பிலும் ஏமாற்றம் உள்ளது. இதை சரிப்படுத்த விழிப்புணர்வு அதிகரிப்பது அவசியம். போலி சாமியார்கள் ஆன்மீக வழியில் சம்பாதிக்க ஆசை கொண்டு தவறான வழியில் செல்கின்றனர். இவர்களை அடையாளம் கண்டு பொதுமக்கள் விலகியிருப்பது நல்லது. பொய்யான வாக்குறுதிகள், பொய் சத்தியம் ஆகியவற்றை மக்கள் நம்பி ஏமாறுகின்றனர். நம் நாட்டில் உள்ள 100 கோடி மக்களும் திறமையாகவும், விழிப்புணர்வுடனும் அவரவர் சொந்த காலில் நிற்கும் நிலை ஏற்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

இந்த சொற்பொழிவு நிகழ்ச்சியில் சுமார் 10ஆயிரம் தியான அன்பர்கள் பங்கேற்றனர். ஆனந்த அலை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஈஷா யோக மையத்தினர் செய்திருந்தனர்.

## ஜக்கியின் உலகளாவிய மக்கள் சிந்தனை

சுவீடன் நாட்டின் தாவோஸ் நகரில் ஆண்டுதோறும் நடைபெறும் சர்வதேச பொருளாதார மாநாட்டில் சத்குரு ஜக்கி வாசுதேவ் மூன்று முறை கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். "பார்ச்சூன் 400 " எனப்படும் சர்வதேச பொருளாதாரத்தை தீர்மானிக்கும் 400 சிறந்த தொழிலதிபர்கள் பங்கேற்கும் இந்த மாநாட்டிற்கு சிறப்பு சொற்பொழிவாற்ற 2006,2007 மற்றும் 2008 ஆகிய 3 ஆண்டுகள் தொடர்ந்து அழைக்கப்பட்ட உலகின் ஒரே நபர் ஜக்கி வாசுதேவ் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டில் உரையாற்றியது குறித்து கேட்டபோது 'சக்தி வாய்ந்த மனிதர்களிடம் பேசுகையில் உலகில் முக்கிய மாற்றம் ஏற்பட்டு உலக மக்களின் வளர்ச்சியை தீர்மானிப்பதாக அமையும் என்பதால் இந்த மாநாட்டில் உரையாற்றினேன் என்றார் ஜக்கி வாசுதேவ்.


ஈஷா யோக மையத்தினரின் சவுண்ட்ஸ் ஆப் ஈஷா குழுவினரின் ஆனந்த இசை நிகழ்ச்சி.




ஈரோட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆனந்த அலை நிகழ்ச்சியில் பங்கேற்று தியானப் பயிற்சியில் ஈடுபட்ட பல்லாயிரக்கணக்கான பெண்களும், ஆண்களும்

# ஆனந்தம் என்றால் என்ன? சத்குரு ஜக்கிவாசுதேவ் விளக்கம்

**ஈரோடு:** ''ஆனந்தம் என்பது என்னுடைய போதனை அல்ல! உயிர் இயங்கத் தேவையான துடிப்பு ஆனந்தம்,'' என ஈரோட்டில் நடந்த 'ஆனந்த சங்கமம்' நிகழ்ச்சியில் சத்குரு ஜக்கி வாசுதேவ் பேசினார்.

ஈரோடு மாநகரை மையமாகக் கொண்டு ஈரோடு, கிருஷ்ணகிரி, ஓசூர், சேலம், திருப்பூர், திருச்செங்கோடு, நாமக்கல் ஆகிய பகுதிகளில் ஜூன் 11ல் தொடங்கி ஜூலை 16 வரை 'ஆனந்த அலை' யோக பயிற்சி ஈஷா யோக மையத்தால் நடத்தப்பட்டது.

ஆனந்த அலையில் தொழிலதிபர், டாக்டர், இன்ஜினியர், சமூகசேவகர்கள் உள்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கு பெற்றனர். சத்சங்கத்தில் பங்கேற்றவர்கள் அனைவரும் சத்குரு ஜக்கி வாசுதேவின் ஆழமான கருத்துக்கள் தங்கள் வாழ்க்கையின் போக்கையே மாற்றக்கூடியதாக இருந்தது என்று கருத்து தெரிவித்தனர்.

இதன் நிறைவாக கோவை 'ஈஷா யோக' மையம் சார்பில், 'ஆனந்த சங்கமம்' நிகழ்ச்சி ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப் பள்ளியில் நேற்று மாலை நடந்தது. முதலில் 'ஈஷாவின் இசை முழக்கம்' நிகழ்ச்சி நடந்தது.

சத்குரு ஜக்கிவாசுதேவ் பேசியதாவது:

நான் சிறுவனாக இருந்த போது, கண்ணீர் விட்டேன். 'எதற்காக இப்படி அழுகிறோம்' என்று எண்ணி, இனி அழக்கூடாது என முடிவு செய்தேன். அதன் பிறகு எனது கண்களில் இருந்து கண்ணீர் வரவில்லை.

ஒருநாள் வெள்ளியங்கிரி மலையில் அமர்ந்தேன் (யோகா). நான் எங்கு உள்ளேன் எனத் தெரியாமல் போனது.

பிரபஞ்சம் அனைத்தும் நானாக ஆனேன். 5 மணி நேரம் கண்ணீரால் எனது சட்டை நனைந்தது. ஒரு ஆனந்தத்தை உணர்ந்தேன். ஒரு நாள் இந்த ஆனந்த அலையால் இந்த உலகே நனையும் என்று எண்ணினேன். அதேபோல், இன்று நனைகிறது.

ஒவ்வொருவரும் பணம், அதிகாரம், பதவி என்று ஒவ்வொன்றின் பின்னால் ஓடுகின்றனர். இது இருந்தால் தான் நான் ஆனந்தமாக இருக்க முடியும் என்று அனைவரும் எண்ணுகின்றனர். அதனால், அதன் பின் ஓடுகின்றனர். இவை அனைத்தையும் எடுத்து பிரித்துப் பார்த்தால், 'ஆனந்தம்' என்ற ஒன்று தான் இருக்கிறது.

ஆனந்தத்தின் துடிப்பு இருந்தால் தான் மனிதன் நல்வாழ்வு வாழ்வான். ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு திறமை உண்டு. ஆனந்தமாக இருந்தால் தான் அதை வெளிவரும்.

ஆசிரியராக இருப்பது ஒரு நல்ல வாய்ப்பு. அனைவரையும் மாற்ற முடியும். ஆனால், கட்டாயத்தால் யாரையும் மாற்ற முடியாது. அப்படி செய்தால், ஒரு கட்டத்துக்கு மேல் நம்மை விட்டு விலகிவிடுவர்.

கணவர், மனைவி, குழந்தை என யாராக இருந்தாலும் அவர்களை கட்டாயப்படுத்தினால் நம்மை விட்டு விலகிடுவர். யாராவது தப்பு செய்தால், சில நேரங்களில் நாம் கண்களை மூடிக் கொள்ள வேண்டும். இது இப்படித் தான் என்று ஒரு அடையாளம் வந்து விட்டால், மாற்ற முடியாது.

எந்த வழியிலாவது உபயோகப்பட வேண்டும் என்பதற்காக இந்த உடலை கடவுள் நமக்கு கொடுத்துள்ளார். ஆனந்தம் என்பது என்னுடைய போதனை அல்ல! உயிர் இயங்கத் தேவை ஆனந்தம். இந்த ஆனந்தத்தை (தீட்சை) 'அன்னமயகோஷம், பிராணமயகோஷம், மனமய கோஷம்' மூன்றிலும் கொண்டு வரமுடியும்.

இந்த மூன்றும் பொருளைச் சேர்ந்தது. இந்த மூன்றையும் தாண்டி உள்ள பொருள்ளற்ற இடைப்பட்ட நிலையியான 'விக்ஞானமய கோஷத்தில்' கொண்டு வர நினைக்கிறேன். அப்போது தான் அந்த ஆனந்தம் எப்போதும் இருக்கும்.

இந்த மூன்று கோஷத்தையும் ஒரே நேர்கோட்டில் நிறுத்தினால், 'விக்ஞானமய கோஷம்'. அதாவது, பொருளற்ற தன்மை ஏற்படும். அதைப் பற்றி சொல்ல வார்த்தை இல்லை. அதை அடைய அனைவரும் முயலுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

'ஆனந்த சங்கம' நிகழ்ச்சியில் இடையே அக்பர், பீர்பால் பற்றி சிறு கதைகளை சொல்லி 'சிரிப்பு அலை' ஏற்படுத்திய சத்குரு, இறுதியில் 'ஆனந்த அலையை' கொண்டு வந்தார்.



ஈஷா யோகா மையத்தின் சார்பில் ஈரோடு செங்குந்தர் பள்ளி மைதானத்தில் நடந்த ஆனந்த சங்கமம் நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். உள்படம்: ஜக்கி வாசுதேவ்.

DINATHANTHI 28 JUL 2008





ஈஷா யோக மையம் சார்பில்

# ஆன்மிக சொற்பொழிவு

ஈரோடு, ஜூலை.28–

ஈஷா யோக மையம் கோவை வெள்ளியங்கிரி மலை அடிவாரத்தில் இயங்கி வருகிறது. இந்த மையம் சார்பில் கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து தமிழகத்தின் பல்வேறு முக்கிய நகரங்களில் ஆனந்த அலை என்ற யோகா பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. கோவையை மையமாக கொண்டு 120 இடங்களில் கடந்த 23–ந் தேதி முதல் ஆனந்த அலை என்ற பெயரில் யோகா பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. நிறைவு விழாவாக ஈரோடு செங்குந்தர் மேல்நிலைப் பள்ளிக்கூட மைதானத்தில் ஈஷா யோக மைய நிறுவனர் சத்குருவின் ஆனந்த சங்கமம் என்ற ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி நேற்று மாலை நடைபெற்றது. இதில் ஈரோடு மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

முதலாவதாக ஈஷாவின் இசை முழக்கம் என்ற இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதை ஈஷாவின் பிரம்மச்சாரிகள், சந்நியாசிகள் மற்றும் இசை அன்பர்கள் இணைந்து வழங்கினார்கள். இது அனைவரையும் தியான சூழலில் ஆழ்த்தியது. பின்னர் ஆன்மிகத்தில் இருந்து அடிப்படை வாழ்க்கை பிரச்சினை வரை கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு சத்குரு விரிவாக விளக்கம் அளித்தார். அதைத் தொடர்ந்து சிறப்பு யோகா பயிற்சிகள் அளிக்கப்பட்டன. சொற்பொழிவு நிகழ்ச்சியை முன்னிட்டு பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.